https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# ஆண்டாள் பிரியதர்ஷினி பார்வையில் இல்லற வாழ்வின் முரண்பட்ட உளவியல்

**மு. ரேவதி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்) (தமிழ்)
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்

**முனைவர் கா. மகேஸ்வரி**
தமிழ் இணைப் பேராசிரியர், நெறியாளர்
தமிழ்த்துறை, அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
சின்னக்கலையம்புத்தூர், பழனி

**ஆய்வுச் சுருக்கம்**

*இன்றைய நாளில் இலக்கியத் தளத்திலும் அரசியல் களத்திலும், தீவிரமாகப் பங்காற்றிக் கொண்டிருப்பவர் ஆண்டாள் பிரியதர்ஷினி. அவரது ஆளுமைகளுள் ஒன்றாகிய சிறுகதைகளுள் 'அடையாளம்' என்ற பெயரில் வெளிவந்துள்ள சிறுகதையின் கருப்பொருளை மையப்படுத்தி இவ்ஆராய்ச்சிக் கட்டுரை உருவாக்கம் பெற்றுள்ளது.*

*இராகவன், காவேரி என்ற இணையர்கள் அன்பால் ஒன்றுபட்டு அரவணைப்பால் விட்டுக்கொடுத்து அருமையான மக்களைப் பெற்று நிறைவாழ்வு வாழ்ந்து வந்தனர். நாற்பத்தைந்து ஆண்டு கால நிறைவில் உடலளவில் ஏற்படுகின்ற மார்பகப் புற்றுநோயால் காவேரி அவதிப்படுகின்றாள். மருத்துவரின் ஆலோசனைப்படி அறுவை மருத்துவம் செய்து உயிர் பிழைக்கின்றாள். உடலளவில் காயம்பட்டாலும் கணவன் இராகவனின் அன்பாலும் ஆதரவினாலும் மனதளவில் காயம்படாமல் வாழலாம் என்று அமைதி கொள்கின்றாள். ஆனால் இராகவனின் உள்ளமும் செயலும் அதற்கு எதிர் முரணாக அமைகின்றன. உடலுறுப்பினை இழந்த தன் மனைவி காவேரி இனித் தமக்கு இன்பமளிக்க எவ்விதத்திலும் பயன்பட மாட்டாள் என்ற ஏக்கத்தில் வெறுப்புக் கொள்கின்றார்.*

*கதையின் தொடக்கத்தில் இல்லற இன்ப சுகத்தில் இணைந்து திளைத்து வாழ்ந்த இருவரின் உளவியலும் பிற்பகுதியில் முரண்பட்டதாக அமைகின்றது. பெண்மையின் எழுச்சி என்று கொண்டாடிய உறுப்பினைப் புற்றுநோயால் இழந்ததைப் பொறுத்துக்கொள்ள முடியாத கணவன் தன் மனைவியைப் பார்த்து, 'நீ முழுமையாய் இல்லை, அடையாளம் தொலைத்த அலி" என்று பேசி வார்த்தைகளால் காயப்படுத்துகின்றார். அத்துடன் அல்லாமல் அடையாளம் எதுவும் இழக்காத இன்னொருத்தியைத் தன் இன்ப சுகம் ஒன்றினை மட்டும் கருதித் திருமணம் செய்ய முடிவெடுக்கின்றார்.*

*கணவன் இராகவனின் அன்பற்ற போக்கினையும், முறையற்ற இல்லற ஒழுக்கத்தினையும் சொல்லாலும் செயலாலும் நேரிடையாகக் கண்ட மனைவி காவேரி 'நானா அடையாளம் இழந்தவள் .... நானா அலி .... இல்லை நீதான் அலி என்று கூறி அதற்குரிய தண்டனையாக கணவன் இராகவனின் அடையாளமாகத் திகழ்கின்ற ஆணுறுப்பினைத் தன் கோப அடையாளத்தின் வெளிப்பாடாக வெட்டியெறிகின்றாள். வார்த்தைகளால் வதைக்கின்ற ஆணின் உளவியலுக்கு மாற்றாக அதற்குரிய தண்டனையைக் கொடுக்கின்ற தீவிரவாதத் தன்மையினை முன்னெடுக்கின்றது பெண்ணின் உளவியல். கதைத்தலைவி எடுத்த*

இத்தீர்க்கமான முடிவினையும் கதைத் தலைவனுக்கு நேர்ந்த கொடுமையான இத் தண்டனையினையும் உளவியல் நோக்கில் விவரிக்கின்றது இவ்ஆராய்ச்சிக் கட்டுரை.

## முன்னுரை

மனித உள்ளத்தில் ஊடாடும் உணர்வுகளின் வெளிப்பாட்டினைப் பற்றிய சிந்தனைகளே உளவியலாகக் கருதப்படுகின்றது. 'உளவியல் என்பது உள்ளத்தின் கோலங்களையும் கோணங்களையும் அதன் விழைவுகளையும் விளைவுகளையும் ஆராய்கின்ற ஓர் அறிவியலாகும்'[1] என்றுரைக்கின்ற அறிஞரின் கூற்று இதனை உறுதிப்படுத்தும். 'மனிதனின் நடத்தையைப் பற்றியும் அவனது நடத்தைக்குள் மறைந்திருக்கும் காரணத்தைப் பற்றியும் ஆராய்கின்ற உளவியல் என்னும் இப்பதத்திற்குக் கழகத் தமிழ் அகராதி இரகசியம், உட்காரியம், உட்கிடை'[2] என்றெல்லாம் பொருள் தருகின்றது.

## கதை மாந்தர்களின் உளவியல்

மனித வாழ்க்கையில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ளும் கதை மாந்தர்களின் உளவிய லைத் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்கள் பலர் இயல்புநிலை மாறாமல் சிறிது கற்பனை கலந்து மிக அருமையான சிறுகதைகளாகத் தந்துள்ளனர். அவ்வகையில் ஆண்டாள் பிரியதர்ஷினி எழுதியுள்ள அடையாளம் என்ற சிறுகதையில் பொதிந்திருக்கும் ஆண் பெண் சார்ந்த உளவியலை இச்சிறு கட்டுரை வழிச் சிந்திப்போம்.

## இல்லறம் என்பது யாதெனில்

ஆண் பெண் இணைந்து நடத்தும் அன்பான வாழ்க்கை முறையினை 'இல்லறம்' என்றழைப்பர். தாம்பத்தியம் என்ற வட சொல்லினை முதன்மைப்படுத்துகின்ற அறிவில் சிறந்தோர்; வயது முதிர்ந்தோர் பலர் தங்களால் இயன்ற நல்ல பல கருத்துக்களை இளம் பருவ மணமக்களுக்கு வழங்கியுள்ளனர். காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம் (இல்லறம்) என்ற முதுமொழிக்கு எடுத்துக் காட்டாக இன்றைய நாளிலும் பல இல்லற இணையர்கள் வாழ்ந்து காட்டியுள்ளனர்.

பெரும்பான்மையாக நடக்கின்ற இவ் இல்லற ஒழுக்கத்திற்கு மாறாக ஒரு சிலர் முரண் பட்ட உளவியலைத் தம் மனதளவிலும், உடற்செயலளவிலும் நடத்திக் காட்டுகின்ற அவலநிலையினையும் காண்கின்றோம். அத்தகைய மனம் கொண்ட இல்லற வாழ்விணையர்களின் முரண்பட்ட கருத்து மோதல்களை மையக் கருவாகக் கொண்டு ஆண்டாள் பிரியதர்ஷினி எழுதியுள்ள 'அடையாளம்' என்ற தலைப்பில் அமைந்த சிறுகதையொன்று அமைகின்றது. அச்சிறுகதை வழிப் பெறப்படுகின்ற இல்லற வாழ்வின் முரண்பட்ட உளவியலை இனிக் காண்போம்.

## அன்பான மனைவி - இன்பமே முதன்மை எனும் கணவன்

இராகவன் காவேரி என்கின்ற அழகான இனிமையான குடும்பம.; இல்லற வாழ்வில் இனிமையாகக் கலந்து தாம்பத்திய சுகத்தில் திளைத்துக் கிடந்த குடும்பம். இல்லறம் என்றால் அன்பும், பாசமும், இன்பமும், துன்பமும் கலந்தது தான் என்று உலகோர் சொல்லும் வாய்மொழிக்கேற்ப அருமையான குழந்தைகளைப் பெற்று நிறைவாக வாழ்ந்து வந்தனர். இவ்வாறான வாழ்க்கையில் காவேரியின் நாற்பத்தைந்தாவது வயதில் பெண்களுக்கே ஏற்படக்கூடிய பிரச்சனை ஒன்று தொடக்கப் புள்ளியாக ஆரம்பித்தது. மாதாந்திர சுழற்சி நிற்கும் பொழுது பெண்மையானது ஹார்மோன்கள் அதிக மாகச் சுரக்கக்கூடிய பருவத்தை அடைகின் றது. காவேரிக்கு ஏற்படுகின்ற வலியினை வார்த்தைகளால் சொல்லிப் புரிய வைத்து விட முடியாது. அனுபவித்தால் தான் தெரியும். 'பிரச்சனையின் ஆரம்பப் புள்ளி நாற்பத்தைந்து வயதில் தான் துவங்கியது காவேரிக்கு. ஒவ்வொரு மாதமும் மூச்சு முட்டித் திணறும் அளவிற்குக் கணமாவதும், ஆயிரமாயிரம் ஊசிகளால் குத்துவது மாதிரியும் தினவு அவளுக்குள் குடியேறிய கந்தகப்பொழுது அது. குளிக்கும் போது சோப்புப் போட்டாலும் கூட வலியின் உச்சம் உயிரைக் குடையும். தொடமுடியாது. சிறுவிரல் கூடப்பட முடியாது துடித்துப் போனாள்; காவேரி'[3] என்று கதையாசிரியர் குறிப்பிடுவதிலிருந்தே காவேரி பட்ட துன்ப நிலையினை நாம் தெளிவாக உணரலாம.; உச்சகட்ட வேதனையில் துடித்த காவேரி ஒருநாள் எதற்கும் இருக்கட்டும் என்று மருத்துவரை நாடிச் சென்றாள். திசுப் பரிசோதனை செய்யப்பட்டது. அதனால் அவளுக்கு ஏற்பட்டுள்ளது 'மார்பகப் புற்றுநோய்' என்று உறுதியாகத் தெரிந்து விட்டது. மார்பகப் புற்றுநோயின் ஆரம்ப நிலை தான் என்றாலும் அதன் வளர்ச்சியின் வேகத்தைக் கட்டுப்படுத்த மருத்துவரின் ஆலோசனைப்படி அறுவை மருத்துவம் செய்யப்பட்டு உயிர் பிழைத்தாள் காவேரி.

## மோகம் எனும் மாயவலை

வாழ்வியல் பயன்பாடு நிறைவேறிய நிலையில் அறுத்தெறியப்பட்ட உறுப்பினை நினைத்து

காவேரி பெரிதாகக் கவலைப்படவில்லை. மோகத்தைவிட அற்புதமான நிகழ்வுகள் நம் வாழ்க்கையில் நிரம்ப உண்டு என்று சமாதானம் செய்து கொண்டாள் காவேரி. ஆனால் இராகவன் அப்படி நினைக்க வில்லை. ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்பது உலகோர் வழக்காக அமைந்தாலும் அதனை மறுதலித்து காவேரியின் இழந்த அந்த உறுப்புகளைப் பற்றிய நித்தியக் கிறக்கத்திலேயே ஆழ்ந்தவ ராய் 'திடீரென்று விளையாட்டுத் தோழமையை இழந்தது போல்' கலங்கிப் போனார் இராகவன். ஆதலால் காவேரியின் மீது எரிச்சலும், கோபமும், விலகலும், வெறுப்பும் முளை விட ஆரம்பித்தன. அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு வீட்டிற்கு வந்த காவேரியிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை. ஏதோ மூணாம் மனுஷியைப் பார்ப்பது போன்ற நெருப்புப் பார்வை உடையவராக மாறிவிட்டார் இராகவன்.

உடம்பிலே ஏற்பட்டிருக்கக் கூடிய வலியினைக் காட்டிலும் இராகவனின் முக மாற்றமும் பேச்சுவன்மையும் காவேரியை மிக அதிகமாகவே பாதித்தன. 'மரப்பாச்சி பொம்மை மாதிரி இருக்கே. எனக்குத் திருப்தியாயில்லை'[4] என ஏளனமாகவே பேசத் துவங்கிவிட்டார். மனைவிக்கு ஏற்பட்ட அறுவை மருத்துவ வலியைக் காட்டிலும் இழந்த அந்த உறுப்புகள் இனித் தமக்கு இல்லையே? என்று ஆதங்கப்பட்ட இராகவனின் இந்த நடவடிக்கையினால் மிகவும் பாதிக்கப்பட்டாள் காவேரி. 'வலியைப் பகிர்ந்துகொள்ள முடியாவிட்டா லும் பரவாயில்லை. வலி நிவாரணியான வார்த்தைகளைக் கூடவா பகிர்;ந்து கொள்ள முடியாது? சுகமான வார்த்தைகளைத் தந்தால் வலிச்சுமை பாதியாய்க் குறையுமே? கரிசனம் கண்ணீர்; குறைக்கும்'[5] என்று எதிர்ப்பார்க்கின்ற காவேரிக்கு இராகவன் எதிர்மறையாகவே நடந்து கொள்கின்றார்.

### எதிரெதிர் திசையில் இல்லற இணையர்

உயிர்ப் பயம் இல்லாமல் கணவனின் அன்பினாலும், அரவணைப்பினாலும் மீதமுள்ள நாட்களைக் கழிக்க எண்ணிய காவேரி இராகவனின் விட்டேத்தியான நடவடிக்கையினால் துவண்டு போகின்றாள்.

'ஏன் விட்டேத்தியாக இருக்கிறார்? முகம் கொடுத்துப் பேசவும் மறந்து விட்டாரா? மடியில் சாய்த்து முதுகை வருடி, கண்ணில் மென்மையாய் முத்தமிட்டுத் தேன் வார்த்தை சொல்ல மாட்டாரா? நீ உயிரோடு வந்ததே போதும் கண்ணம்மா, என்று காதலில் உருக மாட்டாரா? அறுவையில் வெட்டி எடுத்த பின் தோலை இழுத்து வைத்துத் தைத்திருக்கும் பிரதேசத்தை வருடித் தர மாட்டாரா? பத்து வயதுச் சிறுமியுடைய தாய்த் தட்டையாய் இருப்பதை முத்தத்தால் மூழ்கடிக்க மாட்டாரா? வலியை இல்லை என்றாக்க மாட்டாரா?'[6] என்று ஏக்கமும், எதிர்பார்ப்புமாய் இருக்கின்ற காவேரியைப் பார்த்து அலட்சிய விலகல் கொண்ட இராகவன் உக்கிரப் பார்வையுடன் 'நான் உன்னைப் பிரியவிரும்புகின்றேன்'[7] என்கின்ற வெறுப்பு வார்த்தையினை திடீரென்று ஒருநாள் மணமுறிவுக்கான அறிகுறியாய் அறிவிக்கின்றார். 'பிரிதல் என்றால்.... என்று எதிர்க் கேள்வி கேட்ட காவேரியிடம் 'முழுமையான பிரிவு. இருவரும் உறவற்ற நிலையில் வேறு வேறு மனிதர்களாய். வேறு வேறு திசையில்'[8] என்று தீர்க்கமாகப் பதிலளிக்கின்றார் இராகவன்.

### இல்லற வாழ்வின் அடையாளம் எது?

இல்லறம் என்பது எது? வாழ்வில் நேருகின்ற இன்ப துன்ப நிகழ்வுகளுக்கு மணமுறிவு தான் தீர்க்கமான முடிவா? மணமுறிவு நிகழ்வதற்கு அப்படி என்ன நம் வாழ்வில் நிகழ்ந்துவிட்டது? பெரும்பான்மையான இல்லற வாழ்வில் மிக இயல்பாக நடப்பதுதானே? தன் பக்க நியாயத்தைக் கேட்கின்றாள் காவேரி. அதற்குப் பதிலாக, 'நீ முழுமையான பொம்பளையா இல்லை. அடையாளம் தொலைத்த அலியாய் நிற்கின்றாய்....'[9] என்று காவேரியின் மனதைத் தைப்பது போன்ற இழிசொல்லை உதிர்க்கின்றார் இராகவன். இத்தகைய அவச்சொல்லை சற்றும் எதிர்பார்க்காத காவேரி 'அடையாளம் தொலைத்தவளா நான்? எது என் அடையாளம்? என்று நீதி கேட்கின்றாள். அதற்கு காவேரியின் அறுத்தெறிந்த உடற்பாகத்தைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார் இராகவன். வெறும் காமுகனா நீ? சதைக்கு அலையும் நாயா? இவ்வளவுதானா? இத்தனை கேவலமான மிருகமா நீ? உறவை விட உணர்ச்சி தான் முக்கியமா? மனசைவிட மாமிசம் தான் முக்கியமா? .... என் மீது காட்டின காதல், பிரேமை எல்லாமே இந்தச் சதைக்குத் தானா? உயிர் பிழைத்திருக்கும் என்னைவிட உயிரைக் குடிக்கும் நஞ்சு மாமிசமா உனக்கு முக்கியம்?'[10] என்று ஆழ்மனதின் வெளிப் பாடாகிய வேதனை கலந்த சொற்களை ஆற்றாமை மீதூர கொட்டித் தீர்க்கின்றாள் காவேரி. தன்னைப் பற்றிய் தன் உடற்சுகம் பற்றிய கடுஞ்சொற்களாக அமைந்தாலும்

கொஞ்சமும் கூச்சமும் பரிவும் இன்றி, 'ஆமாம் அருவருப்பாயிருக்கிறது. அவமான மாயிருக்கிறது. வாலறுந்த பல்லியைத் தொடுவது மாதிரி இருக்கின்றது. முகம் இல்லாத முண்டம் கூடப் படுப்பது மாதிரி இருக்கிறது. சடலத்தோடு சல்லாபிக்க முடியாது என்னால்'[11] என்றுரைக்கும் இராகவன் அடையாளம் இழக்காத முழுமை யானவளை நாளை நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று தன் முடிவினை இறுதியாகக் கூறிவிடுகின்றார்.

## காவேரியின் உள்ளக் குமுறலாய் வெளிப்பட்ட கொடுஞ்சொற்கள்

இராகவனின் அன்பற்ற போக்கினையும் முறையற்ற இல்லற ஒழுக்கத்தையும் நேரிடை யாகக் கண்ட காவேரி,

'நான் வளைய வந்த வீடு... நான் அனுபவித்த உறவு. என் இல்லறம். என் தாம்பத்யம்.... நாளையிலிருந்து கைமாறுகிறதா? தரம் கெட்ட உனக்காகவா நான் கர்ப்பம் சுமந்தேன்? அடிவயிற்றில் நிரந்தரக் கோடுகள் சுமந்தேன். மனைவி என்ற பெயர் சுமந்தேன்? ஆக்கி, இறக்கி, பரிமாறி உன் நோய்க்குக் கண்விழித்து, விரதமிருந்து பதைபதைத்துப் பூஜை செய்து... வீண் எல்லாம் வீண், நாயை மனுஷன் என நினைத்தது தவறு.... என் மனதில் வெந்நீர் ஊற்றிவிட்டு உனக்குப் பன்னீர் தெளிப்பா? அடையாளம் இழந்தது நானா? எது என் அடையாளம்? தாய்மைப் பயன்பாடு இழந்துவிட்ட சதைக் கூடு மட்டுமா நான்? இத்தனை வருஷத் தாம்பத்யம், அழுகும் சதையால் அழுகிப்போவதா?'[12] எனத் தனக்குத் தானே பேசிக் கொள்கின்றாள். இதனால் காவேரியின் உயிரணுக்கள் ஒவ்வொன்றும் கொதித்தன. 'நீ முழுமையாய் இல்லை, அலி" என்றுரைத்த இராகவனின் சொற்கள் அவளை; அவள் மனதை; அவளின் இல்லற தர்மத்தை; பதிவிரதத் தன்மையை; பத்தினி மேன்மையைச் சிதைத்தன.

## காவேரி எடுத்த தீர்க்கமான முடிவு

நாற்பத்தைந்து வருட இல்லற வாழ்வில் கணவன் மற்றும் குழந்தைகளின் நலத்திற்கு தன் உடல் பொருள் ஆவியினை மனமுவந்து அளிக்கின்ற மனைவியானவள் தனக்குரிய அங்கீகாரம் பறிபோகையில் பதைபதைத்துப் போகின்றாள் என்பதற்குக் காவேரி தகுந்ததொரு சான்றாக அமைகின்றாள். தன்னைப் பாராட்டவில்லை என்றாலும் தன்னைப் பற்றியும்; தன் உடல்நிலை பற்றியும் இழிவான சொற்களால் சுட்டெரிக் கும் பொழுது பொங்கியெழுகின்றாள்; அன்பான வார்த்தைகளால் உச்சி முகர்ந்த மனைவியாகிய காவேரி தற்பொழுது, 'துரோகி, நம்பிக்கைத் துரோகி, நானா அலி? நானா அடையாளம் இழந்தவள்?' என்று தகாத வார்த்தைகளால் அர்ச்சனை செய்து அவமானப்படுத்துகின்றாள். உச்சகட்ட கோபத்தால் கணவன் என்றும் கூடப் பார்க்காமல் பொசுக்கி விடுவது மாதிரி பார்க்கின்றாள். கோபம், வெறி, ஆத்திரம், அவமானம் ஆகியவற்றின் பிடிக்குள்; சிக்கித் தன்னையறியாது தீர்க்கமான ஒரு முடிவினை எடுக்கின்றாள்.

'காவேரிக்குக் கண்கள் சிவந்தன. உடம்பு உதறிப் போட்டது. இருதயம் வேகமாய்த் துடித்து மூச்சடைத்தது. இராகவனின் நிம்மதி, அவளின் நிம்மதிக்குக் கொள்ளிவைத்தது. கொதித்துப் போய் - மூசு மூசென்று கோப மூச்சுவிட்டாள். தோட்டத்துக்குப் போய்ச் செடி வெட்டும் கத்தரிக்கோலை எடுத்து வந்து கண் சிமிட்டும் நேரத்திற்குள் வெட்டி எறிந்தாள்'[13] என்று கதைக் களத்தினை அமைக்கும் ஆண்டாள் பிரியதர்ஷினி, 'எதை வெட்டி எறிந்தாள்?' என்பதனை ஒவ்வொரு வர் மனதிலும் இலைமறைக் காயாக உணர்த்துகின்றார்.

## இராகவனின் முரண்பட்ட உளவியல்

இல்லற வாழ்வின் இன்ப துன்ப நிகழ்வு களுக்கு இணையர்கள் இருவருமே பொறுப்பு. இளமை தொட்டு முதுமை வரை ஒருவருக்கொருவர் ஈடுகொடுத்து அன்பினை யும் அரவணைப்பினையும் சரிசமமாகப் பகிர்ந்து கொள்வதுதான் இல்லற நீதியும் நியதியுமாகும். ஆனால் அதற்கு மாறாக இராகவனின் உளவியல் முரண்பட்டதாக அமைகின்றது. காவேரியைத் திருமணம் செய்த நாளிலிருந்து அவளது உறுப்பு வனப்பினையே முதன்மையாக நினைத்து வாழ்க்கையினைத் தொடங்குகின்றார்.

'கல்யாணமான பொழுதில் இராகவனின் கிறக்கம், மயக்கம் இவற்றிடம் தான் இதிலேயே குடியிருந்து மூச்சு முட்டிச் செத்துட வேணும். அதுதான் மோட்சம்.... ஆசை அறுபது நாளும் மோகம் முப்பது நாளும் கழிந்தும் கூட நித்திய கிறக்கத்தி லேயே கிடந்தான் அவன். சீண்டல், விளையாட்டு, கொஞ்சல், குலாவல் எல்லாமே அவற்றோடுதான்; அவனுடைய மோக மைதானம், நித்திய சில்மிஷம், நிரந்தரக் களியாட்டம். 'என்னுடைய விளையாட்டுத் தோழிகள் இந்த இரட்டை யர்கள், எனக் காதல் வசனம் நித்தமும்'[14]

என்றமைகின்ற ஆணின் உளவியல் இன்ப வேட்கையினை மட்டுமே குறியாகக் கொண்டிருப்பதனைத் தெளிவாக உணர்த்து கின்றது. இராகவனின் மனமறிந்து, காவேரி யும் ஈடுகொடுத்து இன்பமளித்ததுத் தான் வாழ்வினைத் தொடர்ந்து வந்திருக்கின்றாள். வயது முதிர்வின் காரணமாக உடல் வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றத்தின் வெளிப்பாடாக சிதைவுற்ற உறுப்பினைத் தமது நாற்பத்தைந்தாவது வயதில் வெட்டி எடுக்கின்ற சூழல் இயல்பாகவோ அல்லது விதிவசமாகவோ நிகழ்கின்றது. அதனால் தன்னுடைய உயிர் காப்பாற்றப்பட்ட நிலையில் தன் கணவனின் முழுமையான அன்பும் கனிவான கவனிப்பும் தொடர்ந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தாள். ஆனால் உடம்பில் எந்த நாளும் நிரந்தரமாய் அமைந்துவிட்ட அறுவை மருத்துவத்தின் வலியை விடவும் அதிகமாகத் துன்பப் பட்டாள். இராகவனின் எள்ளல் வார்த்தை களால் கொடூரத் துன்பத்தையும் தொல்லை யினையும் அனுபவிக்கின்ற பெண்ணாகத் தான் காவேரி வாழ்ந்து வந்தாள். இராகவ னின் முரண்பட்ட உளவியலால் பாதிக்கப் பட்ட காவேரியின் உளவியல் மிகுந்த பரிதாபத்திற்குரியதாகவே அமைகின்றது.

'மனைவி இறந்தால் கணவன் புது மாப்பிள்ளை' எனும் சொலவடையினைச் சான்றாக்கும் வகையில் இராகவன், உறுப்பிழந்த தன் மனைவியினை உணர்விழந்த மனுஷியாகவே நினைக்கின்றார். அடக்க முடியாத தன் உடல் தினவை நிறைவு செய்வதற்காகக் தாலி கட்டிய மனைவி யானவள் உயிருடன் இருக்கும் பொழுதில் மற்றொரு பெண்ணுடன் திருமண உறவைத் தொடர்வதற்கு முயற்சிக்கின்றார்.

'என்னுடைய உடல் சுகத்திற்காகவே நான் நாளைக்கு புது உறவு துவங்குகின்றேன். ஏழைப் பெண்தான். ஆனால் அடையாளம் இழக்காத முழுமையானவள்..... உன் இறுதிக் காலம் வரை நீ இங்கேயே ஒண்டியிருப்பதில்; எனக்கு ஆட்சேபமில்லை. ஆனால் அவளை அவமரியாதை செய்யாதே. அதுதான் முக்கியம்..... இனி இந்த வீடு அவளின் சாம்ராஜ்யம்'[15] என்று இராகவன் உறுதிபட எடுத்துரைக்கின்றார். அதைக் கேட்கின்ற காவேரி எல்லாப் பெண்களைப் போலவே பெட்டிப் பாம்பாய் அடங்கி, கணவன் சொல் தவறாத பத்தினியாய் மாறி கணவனின் ஏதேச்சிகாரப் போக்கினைக் கண்டிக்காமல் மனமுவந்து தலையாட்டி ஏற்றுக்கொள்வாள் என்று இராகவன் தப்புக் கணக்குப் போட்டு விடுகின்றார்.

## தண்டனை கொடுக்கத் தயங்காத பெண் உளவியல்

நாற்பத்தைந்து ஆண்டு காலமாக அனுபவித்து வந்த இல்லற இன்பம் துன்பம்; வெற்றி தோல்வி; வாழ்ந்து மகிழ்ந்த வீடு; கொண்டாடிய உறவுமுறை அனைத்தும் திடீரென்று நாளையிலிருந்து கைமாறிப் போகின்ற நிகழ்வினைத் தன் கணவனின் வார்த்தைகளாலேயே கேட்டு அதிர்ச்சியுற்ற பெண்ணின் உளவியல் அதற்குரிய தீர்வினைப் பெறுவதற்கு வலுக்கட்டாய மாகத் தள்ளப்படுகின்றது.

இல்லற வாழ்வின் வெற்றியானது மக்களைப் பெற்று வளர்த்து ஆளாக்குகின்ற மகிழ்ச்சியே தவிர அஃறிணை விலங்குகளைப் போல நாளெல்லாம் இன்ப நுகர்வில் இடை விடாமல் ஈடுபட்டுக் கொண்டாடித் தீர்க்கின்ற உடற்சுகத்தில் இல்லை என்பதனை பெண் உளவியல் நன்றாக அறிந்திருக்கின்றது; உணர்ந்திருக்கின்றது. ஆனால் இறப்பு வரைக்கும் எனக்கு இதுவே முக்கியம் என்று வாழ்ந்து அனுபவித்துப் பழக்கப்பட்ட ஆணின் உளவியல் அதனைத் தொடர்ந்து பெறுவதற்கு உரிய முயற்சிகளில் இறங்கும் பொழுது தண்டனைக்குரியதாகின் றது.

நீ முழுமையாய் இல்லை. 'அடையாளம் தொலைத்த அலி' என்ற வார்த்தைகளால் வதைக்கின்ற ஆணின் உளவியலுக்கு மாற்றாக 'நானா அடையாளம் இழந்தவள் நானா அலி..... இல்லை நீ தான் அலி....' என்று அதற்குரிய தண்டனையைக் கொடுக்கத் தயாராகின்றது பெண்ணின் உளவியல்.

உச்சகட்ட கோபத்தாலும் வெறியாலும் ஆத்திரத்தாலும் அவமானத்தாலும் காயப் பட்ட காவேரியின் உளவியல் 'மிதிக்க மிதிக்கப் புழுவும் புலியாகும்' என்ற நிலையில் தந்நிலை மறந்து செயல்படத் துணிகின்றது. தோட்டத்துச் செடி வெட்டும் கத்தரிக்கோலைக் கொண்டு 'உன்னுடைய அடையாளம் என்று எதனை கருதிக் கொண்டிருக்கிறாயோ? அதனை இல்லை யெனும் படிச் செய்கிறேன்" என்று ஒரு நொடியில் தன் கணவன் என்றும் பாராமல் வெட்டி எறியத் துணிகின்றாள். இத்தனை ஆண்டு காலம் தன் வாழ்வில் இரண்டறக் கலந்த எதிர்ப் பாலினம் என்று கூடக் கருதாமல் கண் சிமிட்டும் நேரத்தில் வெட்டி எறிகின்ற ஆவேச குணம் கொண்ட உளவியல் மனப்பான்மை கொண்ட பெண் ணாக காவேரி மாறிச் செயல்படுகின்றாள்.

### இராகவனுக்குரிய தண்டனை ஏற்புடையது தானா?

காவேரியின் உடற்குறையினைச் சுட்டிக் காட்டி வேதனைப்படுத்துவதனை மனைவி என்னும் கட்டுக்குள் கட்டுப்பட்டு ஏற்றுக் கொள்கின்றாள.; ஆனால் மாற்றாள் என்னும் நிலையில் புதுவரவாகத் தன் தாம்பத்ய உறவுக்குப் போட்டி போட இன்னொருத்தி வர இருக்கிறாள் என்பதனைக் காவேரி தன் கணவனின் வாய்மொழியாகக் கேட்டதும் அதனை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றாள். மனதளவில் காயப்பட்டுப்போன காவேரி ஆண் என்னும் அதிகார மமதைக்குள் சிக்குண்டு விட்டேத்தியாக் தன்னிச்சையாக ஒரு முடிவினை எடுக்கத் துணியும் பொழுது அதற்குரிய தண்டனையைத் தருவதற்கு முன்வருகின்றாள். கோப உணர்வின் உச்ச கட்டமாக நிகழ்ந்து விடுகின்ற இத்தண்டனை இராகவன் போன்ற கணவன்மார்களுக்கு ஏற்புடையதுதானா? என்பதனை ஒவ்வொரு வரும் சிந்தித்துச் செயல்படுவதற்கு ஏற்ப ஆண்டாள் பிரியதர்ஷினி இக்கதையின் முடிவினை அமைத்துள்ளார். ‘அடையாளம்’ என்று தலைப்பிடப்பட்ட இக்கதையின் தலைப்பு விளக்கமாக 'இராகவனின் அடையாளம்....... காவேரியின் கோப அடையாளம் சுமந்து துண்டாகித் தூர விழுந்தது" என்று நிறைவு செய்கின்றார்.

'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண்' என்று பாடியுள்ள கவிஞரின் வார்த்தை யினை உறுதிப்படுத்தும் வண்ணம் இப்படி யான ஒரு கதைக் களத்தினை அமைத்துப் பெண்ணிய உணர்வாக் பெண்ணியவாதியின் குரலாக ஒலிக்கச் செய்திருக்கின்றார் ஆண்டாள் பிரியதர்ஷினி. அடங்கி ஒடுங்கி வேலை செய்பவளாகவும், இட்ட பணியி னைத் தட்டாமல் செய்பவளாகவும், அலங்காரப் பதுமைகளாகவும் இனிவரும் பெண்ணுலகம் அமையப்போவதில்லை; அனுமதிக்கவும் போவதில்லை என்பதனை இக்கதை வாயிலாகப் பதிவு செய்துள்ளார் ஆசிரியர். கணவன் செய்கின்ற தவற்றினைத் தட்டிக்கேட்கின்ற பெண்ணாக் ஏன் தண்டனை கொடுக்கின்ற பெண்ணாக காவேரி போன்ற ஒவ்வொரு பெண்ணும் திகழ வேண்டும் என்பதனைப் பெண்ணிய உலகிற்குச் சுட்டிக் காட்டியுள்ளார் ஆண்டாள் பிரியதர்ஷினி.

### தீவிரவாதப் பெண்ணிய உளவியல்

பெண்ணியம் என்றால் பெண்களின் உணர்வு களை; பெண்களின் முன்னேற்றத்தை; பெண் களின் விழிப்புணர்வைப் பற்றிய கருத் தாக்கமே என்பதனைச் சிலர் ஏற்க மறுக்கின்றனர். ஆண்களை எதிர்ப்பது; ஆண் களுக்கு அடங்கி நடக்க மறுப்பது; ஆண்களுக்குப் போட்டியாகக் களத்தில் நடமாடுவது என்கின்ற கருத்தினைப் பெரும் பான்மையோர் தங்கள் மனதில் பதியம் போட்டு வைத்துள்ளனர். காலங்காலமாக அடிமைப்பட்டு; பத்தாம் பசலித்தனமாய் வாழ்ந்து; பழக்கப்பட்டுக் கட்டிய கணவனின் அதிகாரப் போக்கினை எதிர்த்துத் துணிந்து நிற்கவும்; தட்டிக் கேட்கவும் தகுதியற்று வாழும் பெண்ணிற்குப் போதியகல்வியும், விழிப்புணர்வும் ஊட்டி ஆண்களுக்கு இணையான மதிப்பினையும் பொறுப்பினை யும் பெற்றுத்தருவதே பெண்ணியத்தின் செயற்பாடும்நோக்கமும் ஆகும் என்பதனைத் தற்பொழுதுதான் சிலர் உணரத் தொடங்கி யுள்ளனர். உணருகின்ற ஒரு சிலரும் தங்களுக்குரிய உரிமையினையும் கடமை யினையும் விட்டுத்தர மறுக்கின்றனர். அதன் ஒரு பகுதியாக பெண்களுக்குரிய இலக்கினை அடைவதற்குத் தடையாக நிற்கின்ற ஆண்கள் அனைவரையும் தங்களுக்கு உரிய எதிரியாகப் பெண்கள் பலர் கட்டமைத்துக் கொள்கின்றனர்.'[16]

இராகவனும் காவேரியும் இணைந்து வாழ்ந்து வந்த இல்லற வாழ்க்கையின் நாற்பத்தைந் தாவது வயதில் ஏற்பட்ட உடற்குறையின் காரணமாக மனதளவில் வேறுபடுகின்றனர்; முரண்படுகின்றனர். உடற்சுகம் கிட்டாத இவ்வேளையில் ஒருவருக்கொருவர் அன்பி னையும் ஆதரவினையும் பரிமாறிக் கொள்ளலாம் என்ற சிந்தனையினை ஆணின் உளவியல் ஏற்க மறுக்கின்றது. அதன்பிரதிபலிப்பாக இராகவனின் உள்ளமா னது இன்னொரு பெண்ணினை வாழ்க்கைத் துணையாக ஏற்க முயற்சிக்கின்றது. இராகவனின் மனதிலும் இல்வாழ்விலும் காவேரி நிலைத்திருக்க வேண்டிய இடத்தில் மற்றொரு இணையினைக் கொண்டு வந்து திணிக்க முயலும்போது அன்பு வயப்பட்ட பெண்ணிய உளவியல் வன்முறையினைக் கையில் எடுக்கத் துணிகின்றது.

ஆணாகிய தன் கணவனின் நலத்திலும் உபசரிப்பிலும் மிதவாதப் போக்கினைக் கடைப்பிடித்து வந்த காவேரி எனும் பெண்ணினம் திடீரென்று தன் நடவடிக்கை யினைத் தீவிரவாதத் தன்மைக்கு ஆட்படுத்து கின்றது. தன் வாழ்க்கையில் இப்படியான தொரு முடிவினைத் தன் மனமும் உடலும் செய்யத்துணியுமா? என்பதனைக் காவேரி நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டாள்.

கட்டிய கணவனின் மீது இத்தகைய அதிதீவிரத் தன்மையினைக் கடைப்பிடித்துத் தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டு காவேரி செய்து முடித்த தீர்க்கமான செயல் ஏற்கத்தக்கது தானா? ஒவ்வொரு பெண்ணுக்கும் அவரவர் துணைவர் இழைக்கின்ற துன்ப நிகழ்வுகளுக்குப் பதிலாக் வக்கிர புத்தி கொண்ட வருங்கால ஆண் சமுதாயத்திற்கு காவேரி போன்ற பெண்கள் கொடுக்கின்ற தண்டனைகள் ஒவ்வொன்றும் நிரந்தரமாக மற்ற பெண்களையும் செயல்படத் தூண்டி விட்டால் என்ன செய்வது? என்கின்ற கேள்விகள் அனைவரது மனதிலும் எழுவது உண்மைதான். இதனைப் போன்ற மேலும் பல கேள்விகள் இக்கதையினைப் படிக்கின்ற வாசகர்களுக்குக் கட்டாயம் தோன்றத்தான் செய்யும். அதற்குரிய அடையாள விளக்கமாக,

'இராகவனின் அடையாளம் துண்டாகித் தூரவிழ, அவரின் தீனக்கதறல், சுகமாய் ஒலித்தது அவளின் காதுகளில், துடித்து அடங்கிய அடையாளத்திலிருந்து வழிந்தோடியது குருதி .... காவேரியின் கோப அடையாளம் சுமந்து .....'[17] என்று நிறைவு செய்கின்றார் ஆண்டாள் பிரியதர்ஷினி. இது சரியான முடிவா? பெண் சமூகம் கொடுக்கின்ற இத்தண்டனையினை ஆண் சமூகம் இனிமேல் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது. ஆணின் செயலுக்குத் தகுந்த தண்டனையா? அல்லது பாதிக்கபட்ட பெண்ணின் கோப வெளிப்பாட்டின் குமுறலாய் வெடித்தெழுந்த வடிகாலா? என்பதனையெல்லாம் ஒவ்வொரு வாசகரும் சிந்திக்கும் வண்ணம் செய்துவிட்டார் ஆண்டாள் பிரியதர்ஷினி. வார்த்தைகளால் காயப்படுத்திய கணவனாகிய இராகவன் இத்துடன் நிறுத்திக்கொள்ளாமல் மேலும் நீட்டித்து, 'எனக்கு இன்னொரு பெண்ணுடன் திருமணம்? அதுவும் அடையாளம் எதுவும் இழக்காமல் முழுமையானதொரு வடிவுகொண்ட மற்றொரு பெண்ணுடன்' என்று தான் செய்யப்போகின்ற திருமணத்தினை வலிந்து செயலளவில் செய்து காட்ட முயற்சிக்கின்றார். அதுவரை அமைதியாக வாழ்ந்து காட்டிய பெண்ணினம் இதனைக் கேட்டதும் கொஞ்சம் கூடத் தாமதிக்காமல் அம்முடிவினை ஏற்றுக்கொள்ள மறுத்து ஆர்ப்பரிக்கத் தொடங்கிவிடுகின்றது. தனக்குரிய ஒரு பொருளை மாற்றாள் என்னும் பெயரில் வேறு ஒருத்தி அபகரிக்கத் தொடங்கும் பொழுது அப்பொருள் உயிருடன் இருக்க வேண்டுமா? அல்லது உயிர்ப்புடன் இருக்க வேண்டுமா? என்பதனை முடிவெடுத்துப் பொங்கி பிரவாகமெடுக்கின்றது. தான்யார்? என்பதனை நிரூபிக்க வேண்டி அதிதீவிரப் பெண்ணிய உளவியலின் ஒரு கூறாக் ஆத்மார்த்த வெளிப்பாடாக காவேரி எனும் வடிவில்; பெயரில் தோற்றம் கொள்கின்றது.

### கொங்கையினை வீசி எறிந்த கண்ணகி - கொங்கைகளை இழந்து நின்ற காவேரி - தொன்மக் குறியீடு

கொங்கை என்பது பெண்ணின் உடல் உறுப்புகளில் ஒன்றாகவும் காம உணர்வின் வனப்புப் பொருளாகவும், குழந்தை செல்வங்களின் உணவுக் கொள்கலனாகவும் அமைந்து சிறப்பது. ஆனால் அதனைக் காப்பிய ஆசிரியர் இளங்கோவும் சிறுகதை யாசிரியர் ஆண்டாள் பிரியதர்ஷினியும் தன் கதைக்களத்தில் ஒரு அபாயக் குறியீடாகக் காட்சிப்படுத்தியுள்ளனர்.

**'பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்**

**ஒட்டேன் அரசோ டொழிப்பின் மதுரையுமென்**

**பட்டிமையும் காண்குறுவாய் நீயென்னா விட்டகலா**

**நான்மாடக்கூடல் மகளிரும் மைந்தரும்**

**வானக் கடவுளரும் மாதவரும் கேட்டிமின்**

**யானமர் காதலன் தன்னைத் தவறுஇழைத்த**

**கோநகர் சீறினேன் குற்றமிலேன் யானென்று**

**இடமுலை கையால் திருகி மதுரை**

**வலமுறை மும்முறை வாரா அலமந்து**

**மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து**

**விட்டா ளெறிந்தாள் .... ......'[18]**

தன் கணவன் கோவலன் கள்வனல்லன், குற்றமற்றவன் என்பதனைத் தன் காற்சிலம்பு கொண்டு நிரூபித்த கண்ணகி தன் கோப ஆவேச வெளிப்பாட்டின் உச்சமாகத் தன் இடப்பக்க கொங்கையை வலப்பக்கக் கையால் திருகி எடுத்து மதுரை நகரை நோக்கி வீசியெறிந்து தீக்கொளச் செய்தாள் என்பது காப்பியச் செய்தி.

சாதாரணமான ஓர் உடல் உறுப்பு எனக் கருதாமல், மற்ற பிற உறுப்புகளைப் போலத்தான் இவ்வுறுப்பும் (கொங்கைகள்) என்று சிந்திக்க மறுக்கின்ற இராகவனின் இன்ப வேட்கைக்குத் தடைக்கல்லாக காவேரியின் அறுவை மருத்துவம் அமைந்து விட்டது. மார்பகப்புற்று நோயின் காரணமாக மருத்துவ முறையில் தன் கொங்கைகளை இழந்த காவேரியினைப் புறந்தள்ளி மற்றொருத்தியை இன்பச்சுவை ஒன்றை

மட்டுமே கருதி திருமணம் செய்யத் துணிகின்றார் இராகவன். அதற்குரிய தண்டனையாகத் தன் உறுப்பினை இழந்து அடையாளமற்றுப் போகின்றார் என்பது ஆண்டாள் பிரியதர்ஷினியின் கதைக்களச் செய்தி.

தமிழ் இலக்கியப் படைப்பாசிரியர் அனைவ ராலும் அழகுணர்ச்சி ததும்ப வர்ணிக்கப் பட்ட உடல் உறுப்பினை இளங்கோவடி களும், ஆண்டாள் பிரியதர் ஷினியும் தன் கதைக்களத்தில் பெண்களுக்கு உரிய ஆயுத மாகக் காட்சிப்படுத்தியுள்ளனர். அழகிருக்கும் இருக்கும் இடத்தில் ஆபத்தும் இருக்கும் என்பதனை நிரூபிக்க இருவரின் கொங்கை இழப்பினைத் தொன்மக் குறியீடாக்கியு ள்ளனர்.

## நிறைவாக

1. இல்லறம் என்பது நல்லறமாக ஆண் பெண் இருவரும்சேர்ந்து அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருள் பயக்கும் சாதனமாக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அன்பைப் பகிர்ந்து அரவணைப்பில் மகிழ்ந்து கொண்டாட வேண்டிய இம்மையுலக நெறி என்பதை அனை வரும் உணர வேண்டும்.
2. இளமையில் இன்பமாகவும் முதுமையில் ஒருவருக்கொருவர் தூண்டுகோலாகவும்,; ஊன்றுகோலாகவும் வாழ்ந்து சிறப்பது தான் இல்வாழ்வின் வெற்றிக் குறியீடாகும்.
3. ஆண் பெண் என்று வேறுபாடு கருதாது காதலர் இருவரும் கருத்தொருமித்து வாழ வேண்டுமேயொழிய அஃறிணை உயிர்களைப் போல எந்நாளும் இன்ப விழைச்சு கொண்டு ஈடுபட்டால் எதிர்பாராத இடத்தில் இருந்தும் கூட துன்பம் வரும். இன்னுயிரைக் கூட இழக்க நேரிடும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.
4. ஆண் பெண் என்பது உடலளவில் ஏற்பட்ட மாற்றம் தானே தவிர மனதளவில் செயலளவில் ஆணுக்கு உள்ளதனைப் போலவே பெண்ணுக்கும் வளர்சிதை மாற்றங்கள் நிகழும் என்ப தனை நம்ப வேண்டும். தன்னில் சரிபாதி யாக அமைகின்ற பெண்ணினத்தை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.
5. அமைதியான பூஞ்சோலையாகக் காட்சியளிக்கின்ற பெண்ணினம், தனக்குரிய பங்களிப்பில் குறை ஏதும் ஏற்பட்டால் தீக்காடாகவும் மாற நேரிடும். மிதவாதம் என்ற தன்மையில் இருந்து மாறித் தீவிரவாத போக்கில் இயங்கத் தயங்காது என்பதனை உணர்ந்து செயல்பட வேண்டும்.;

## குறிப்புகள்

1. தி.சு.நடராசன், திறனாய்வுக்கலை கொள் கைகளும் அணுகுமுறைகளும், ப.88.
2. கழகத் தமிழ் அகராதி, ப.598.
3. ஆண்டாள் பிரியதர்ஷினி, ஆண்டாள் பிரியதர்ஷினி கதைகள், 'அடையாளம்', ப.146.
4. மேலது, ப.144.
5. மேலது, ப.147.
6. மேலது, ப.148.
7. மேலது.
8. மேலது.
9. மேலது, ப.149.
10. மேலது, ப.150.
11. மேலது, பக்.149-150.
12. மேலது, ப.151.
13. மேலது, ப.152.
14. மேலது, ப.146.
15. மேலது, ப.150.
16. இரா. பிரேமா, பெண்ணியம்,ப.3.
17. ஆண்டாள் பிரியதர்ஷினி, மு.நூ.ப.152.
18. சிலப்.பா.வரி.36-46.

## துணைநூற்பாட்டியல்

1. ஆண்டாள் பிரியதர்ஷினி, ஆண்டாள் பிரியதர்ஷினி கதைகள், ஏகம் பதிப்பகம், சென்னை, 2009.
2. கழகப் புலவர் குழு, கழகத் தமிழ் அகராதி, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1998, (பதினெட்டாம் பதிப்பு).
3. சிலப்பதிகாரம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
4. நடராசன், தி.சு., திறனாய்வுக் கலை, கொள்கைகளும் அணுகுமுறைகளும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை. 2016 (திருத்திய பத்தாம் பதிப்பு)
5. பிரேமா, இரா., பெண்ணியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 2010 (நான்காம் பதிப்பு).